05/07/18

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்
மாநிலத் திட்ட இயக்ககம், சென்னை – 600 006
திட்ட இயக்குநரின் செயல்முறைகள்

அ1/4884/2018

ந.க. எண். 1143 / அ1 / அஇகதி /2018 நாள்: 29.06.2018

20.07.2018.

பொருள் : கலா உத்சவ் – வட்டார, மாவட்ட, மாநில அளவில் கலை விழா போட்டிகள் நடத்திட வழிகாட்டல் நெறிமுறைகள் வழங்குதல் சார்பாக.

பார்வை :

1. NCERT Kalautsav Guidelines of Previous years.
2. PAB 2018-19–இன் வரைவு ஒப்புதல்.

... ... ...

மேற்கண்ட பொருள் மற்றும் பார்வையின் அடிப்படையில் 2018–19ஆம் ஆண்டிற்கான தேசிய கலை விழா (Kalautsav) செயல்பாடுகள் இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி (IX மற்றும் XII வகுப்புகள்) மாணவர்களது படைப்பாற்றலை வளர்க்கவும், பாரம்பரிய கலைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கவும் இசை, நாடகம், நடனம் மற்றும் காண்கலைகள் (Music, Theatre, Dance, Visual Arts (Drawing, Printing, Sculpture, Crafts) எனும் நான்கு பெருந்தலைப்புகளில் போட்டிகள் நடத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. NCF 2005 Position Paper 1.7 பரிந்துரை செய்ததின் அடிப்படையில் கலா உத்சவ் திட்டம் உருவாக்கப்பட்டு, இச்செயல்பாடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் நடைபெறும் இப்போட்டியில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், மற்றும் தனியார் பள்ளிகள் ஒரு பிரிவின் கீழும் KVS மற்றும் NVS பள்ளிகள் ஒரு பிரிவின் கீழும் பங்கு கொள்வர். 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் இசை, ஓவியம், நடனம், காண்கலை போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

இந்நிலையில் பாரம்பரிய கலைகளை மீட்டெடுத்து உயிர்ப்பூட்டி பள்ளி மாணவர்கள் மூலம் பள்ளிகளில் அவற்றை வளர்க்க, செயல்திட்டம் தற்போது வகுக்கப்பட்டுள்ளது. சமூகப் பார்வையில், மகிழ்ச்சியின் வெளிப்பாடாக, உயிர்ப்புடன் இருக்கும் பாரம்பரியக் கலைகளை மாணவர்கள் அறிந்திடும் வகையில் மனிதவள மேம்பாட்டு துறை Kalautsav என்ற திட்டத்தை 2015–16ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இச்செயல்பாட்டில் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கும் அவசியம் வாய்ப்பளிக்க வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, ஒவ்வொரு பள்ளியும், தனது சூழலில் உள்ள இந்த நான்கு கலை வடிவங்களை உற்று நோக்கி, பாரம்பரிய கலைநிபுணர்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் திறமைகளைப் பயன்படுத்தி மாணவ, மாணவியர்க்கு ஆர்வத்தை வளர்த்து, அவர்களைக் கொண்டு, வட்டார, மாவட்ட, மாநில அளவிலான கலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

இத்திட்டமானது ஒவ்வொரு மாவட்டமும், தனது வட்டாரங்களில் உள்ள இந்த நான்கு கலை வடிவங்களை கண்டுணர்ந்து, அவை நலிந்துவிடாமல் பாதுகாக்கப்படவும், தொடர்ந்து அக்கலைகளை வளர்க்கப்படுவதற்கும் வழிகோலுகிறது.

இச்செயல்பாடு தகுதியான மாணவனை அந்த வட்டாரத்தின் பாரம்பரிய கலையின் வருங்கால Ambassador ஆகப் போற்றி வளர்க்கும். எனவே பள்ளிகள் நாளைய பாரம்பரிய கலைகளின் பயிற்சி கூடமாக மாறுவதற்கும் வழியமைக்கும்.

இது வருடத்தின் ஒரு சில நாட்களில் மட்டும் நடத்தப்படும் நிகழ்வு அல்ல. வருடம் முழுமையும் நடக்க வேண்டிய நிகழ்வு. இதில் Identification, Exploring, Understanding, Practising, Evolving and Showcasing எனும் ஐந்து நிலைகள் உள்ளன. முதலில் ஒவ்வொரு மாவட்டமும் தங்களது மாவட்ட பாரம்பரிய (நான்கு பிரிவுகளில்) கலை வடிவங்களை நன்கு உற்றுநோக்கி அவற்றை ஒரு Online Project ஆக உருவாக்க முயல வேண்டும். மாநிலம், மாவட்ட வாரியாக, Zonal வாரியாக பாரம்பரிய (நான்கு பிரிவுகளில்) கலைகளின் Data base உருவாக்கப்பட வேண்டும்.

பிறகு மாவட்ட கல்வி அலுவலர்கள், இசை, ஓவியம், நடனம், Craft ஆசிரியர்கள் பட்டியலை தொகுத்து ஒவ்வொரு கலைகளையும் உற்று நோக்கி Online Project உருவாக்க வழிவகை செய்ய வேண்டும்.

இந்த Online Project-ல் கலையின் தாத்பர்யம், கலை சார்ந்த வரலாறு, தற்போதைய நிலை, அது உருவான விதம், செய்யப்படவேண்டிய பயிற்சிகள், பாரம்பரிய கலை நிபுணர்களை நேர்காணல் செய்தல், பொது நிகழ்ச்சிகளை Video பதிவு செய்தல் முதலிய செயல்பாடுகள் இடம் பெறும்.

பிறகு கலை ஆசிரியர்களைக் கொண்டு, வட்டார வாரியான சிறந்த கலைஞர்களை கண்டுபிடித்து பள்ளியில் செய்து காட்ட ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

இச்செயல்பாடுகள் கீழ்வரும் ஐந்து நிலைகளில் அமைதல் வேண்டும்.

- நமது மாநிலத்தில் அந்தந்த மாவட்டங்களில் உள்ள பாரம்பரிய கலை வடிவங்களை (இசை, நடனம், நாடகம், காண்கலை) கண்டுணர்ந்து, உற்றுநோக்கி Online Project உருவாக்குதல் முதல் பணியாகும்.
- இது சார்ந்து கலைஞர்களை பள்ளிக்கு தருவித்து, நிகழ்வுகள் நடத்தி, மாணவர்களை ஆர்வமுடன் உற்று நோக்க செய்தல் இரண்டாம் பணி.
- ஆர்வமுள்ள மாணவ/மாணவிகளை கலை ஆசிரியரின் வழிகாட்டலின் பாரம்பரிய கலைஞர்களைக் கொண்டு பள்ளியிலேயே கற்று தருதல் மூன்றாம் பணி.
- பயிற்சி பெற்ற மாணவர்களில் சிறந்த Zonal, District, State level போட்டிகளில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல் நான்காம் பணி.
- மிகச் சிறந்த மாணவ கலைஞர்களை தெரிவுசெய்து, தேசிய கலா உத்சவ் நிகழ்ச்சியில் பங்கு பெறச் செய்தல் ஐந்தாம் பணி.

மாநிலத்தில் இப்பணியினை ஆற்றி வரும் NGO அமைப்புகள் மற்றும் கலை இலக்கியக் குழுக்களை இனம் கண்டு வழிகாட்டும் குழு அமைத்து, தமிழகம் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக ஈட்டி வந்த வெற்றிகளை நினைவில் கொண்டு இந்த ஆண்டும் வெற்றி முத்திரை பதிக்கும் செயல்பாடுகளை மாநில அளவில் தெரிவு செய்து, தேசிய அளவில் நமது பாரம்பரிய கலை வடிவங்களை முன்னிலைப்படுத்த ஆவண செய்ய வேண்டும்.

மாநில அளவில் கலா உத்சவ் போட்டிகளை நடத்துவதற்காக ரூ. 10.00 இலட்சமும், மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர் அடங்கிய சுமார் 50 பேர் கொண்ட மாநில கலைக் குழுவினை (மாணவர்கள் மற்றும் துணை செல்பவர்கள்) தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள டெல்லி அழைத்து செல்ல ரூ. 1.00 இலட்சமும் MHRD-யால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இச்செயல்பாட்டை 2018–19ஆம் ஆண்டில் கலா உத்சவ் சார்ந்து செய்து முடிக்க மேற்கொள்ள வேண்டிய செயல்திட்டம் கீழ்க்கண்டவாறு திட்டமிடப்படுகிறது.

கலா உத்சவ் – ஆண்டு செயல் திட்டம் (2018–19)

| வ. எண். | செயல்பாடு | பொறுப்பு | காலவரையறை |
|---|---|---|---|
| 1. | நான்கு கலை வடிவங்களுக்கும் (இசை, நடனம், நாடகம், காண்கலை) மாநில வழிகாட்டு குழு அமைத்தல் | SPO | July |
| 2. | கலை ஆசிரியர்களை கொண்டு Cultural, Heritage, Mapping செய்தல் | DPO | July |
| 3. | ஒவ்வொரு பாரம்பரிய கலையையும் Online Video உருவாக்குதல் | DPO | July |
| 4. | (2015 –16) முதல் (2017-18) வரை மூன்று ஆண்டுகளுக்குரிய You tube Kalautsav video-க்களைத் தொகுத்தல் | SPO | July |
| 5. | நான்கு பாரம்பரிய கலைக்கான மாவட்ட வாரியான பயிற்சியாளரை தெரிவு செய்தல் | DPO | July |
| 6. | பள்ளிகளில் பாரம்பரிய கலைகளை அறிமுகப்படுத்துதல். | DPO | July |
| 7. | பள்ளிகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு பயிற்சியளித்தல் | DPO | July |
| 8. | Zonal Level Competition | DPO | August |
| 9. | Educational District Level Competition | DPO | August |
| 11. | State Level Competition | SPO | Sep |
| 12. | Training to National Level Teams | SPO | Sep & Oct |
| 14. | National Level Competition | SPO | Nov or Dec |
| 15. | Documentation | SPO | July - Dec |

மேற்கண்ட செயல்பாட்டிற்கு கலை ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க கலைஞர்களை, கருத்தாளர்களைக் கண்டறிதல், பயிலரங்கம் அமைத்தல் ஆகியன மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) மற்றும் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (DIET) உதவியுடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

மேற்கண்ட பணிகள் குறித்த காலத்தில் நிறைவு பெற அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் முழு ஈடுபாட்டுடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திட்ட இயக்குநர்

29/6/18

பெறுநர்

அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்

1. பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6
2. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர், சென்னை–6.

} தகவலுக்காகக் கனிவுடன் அனுப்பப்படுகிறது

3. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்
4. அனைத்து இணை இயக்குநர்கள் (மாவட்ட கண்காணிப்பு)
5. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.